1969 மார்ச் 5]

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : லஞ்ச ஊழல்கள் சர்க்கார் ஊழியர்கள் விஷயத்தில் நிரூபிக்கப்பட்டால் பதவியிலிருந்தே விலக்கப்படுகிறார்கள். அதைவிடக் கடுமையான தண்டனை அவர்களுக்கு எதுவும் இல்லை.

திரு. வி. கே. கோதண்டராமன் : வழக்குகளைத் தொடர்ந்து நிரூபிக்க முடியாத நிலைமையிலேகூட கட்டாய ஓய்வு முறை கையாளப்படுகிறது என்பது கனம் முதலமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? ஆகவே நிரூபிக்கப்படாத நிலைமை இருக்குமானால், அவர்கள் கட்டாய ஓய்வில் செல்லக் கூடிய வகையில் கட்டுப்படுத்தக்கூடாது என்று உத்தரவு பிறப்பிக்க முடியுமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அப்படி எதைப்பற்றியாவது குறிப்பிட்டு எழுதினால் கவனிக்கலாம்.

Republic Day Celebrations

* 167 *Q*.—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the National Cadet Corps participated in the parade held in connection with the Republic Day Celebrations held on 26th January 1968 in the City;

(*b*) whether the colourful pageantry usually presented as part of the parade was also missing this year; and

(*c*) if so, the reasons therefor?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) இல்லை.

(இ) ஆம்.

(உ) அப்போது பள்ளிகளும், கல்லூரிகளும் மூடப்பட்டிருந்தமையால், தேசீய மாணவர் படையினர் பயிற்சி பெறுவதற்குப் போதிய காலம் இராது எனக் கருதப்பட்டது. எனவே, தேசீய மாணவர் படையினர் குடியரசு நாள் விழாவில் பங்குபெறத் தேவையில்லை என்று முடிவு செய்யப்பட்டது.

1968 ஜனவரி 3-ம் தேதியன்று, உலகத் தமிழ் மாநாடு தொடர்பாக சென்னை மாநகர் மகத்தான அலங்கார பேரணிக் காட்சியைக் கண்ணுற்றது. ஆகையால், குடியரசு நாளன்று மற்றொரு அலங்கார அணி விழா தேவை இல்லை எனக் கருதப்பட்டது.

திரு. கே. விநாயகம் : குடியரசு விழா கொண்டாடியபோது நமது நகரத்திலே கல்லூரிகள் மூடப்பட்டதன் காரணமாகத்தான் என்.சி.சி. பேரேட் இல்லையா? ஆட்சியினுடைய கொள்கைப்படி என்.சி.சி.யில் இந்தியைக் கையாளக்கூடாது என்று சொல்லி என்.சி.சி. இந்த ஆண்டு இயங்காமல் செய்துவிட்டதாலே தான் என்.சி.சி. பேரேட் வரவில்லை என்பது உண்மையா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இந்தக் குறிப்பிட்ட கேள்வி கேட்கப்பட்டது 1968ஆம் ஆண்டு. கல்லூரிகள் மூடப்பட்ட நேரத்திலே குடியரசு விழாவில் தேசிய மாணவர் படை கலந்துகொள்ளவில்லை என்றுதான் பதில் தெரிவித்தேன்.

திரு. பெ. மலைச்சாமி : தலைவர் அவர்களே, தேசீய மாணவர் படைக்குப் பதிலாக மாற்றுத் திட்டம் ஏதாவது தமிழக அரசு வைத்து இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அதுபற்றி மாற்றுத் திட்டமொன்று அமைப்பதற்கு ஜூன், ஜூலையில் துவக்கலாம் என்ற அளவில் அதற்காக ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது.

திரு. கே. விநாயகம் : நாம் விடுதலை பெற்றதுமுதல் குடியரசு விழா வைக் கொண்டாடி ஒவ்வொரு ஆண்டும் மக்களுடைய நன்மதிப்பைப் பெற்றிருக்கிற நம்முடைய சர்க்கார். இந்த ஆட்சிக்கு இப்பொழுது வந் திருக்கிறவர்கள் குடியரசிலே நம்பிக்கையற்றவர்கள் என்ற காரணத்தி னாலே பேஜண்ட்ரி போன்றவை விழாவில் இல்லையென்று பரவலாகச் சொல்லப்படுவது உண்மையா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : பரவலாகச் சொல்லப்படுவது பற்றிக் கவலையில்லை. திரு விநாயகம் அவர்கள் சொல்வதற்கு விளக்கம் அளிக்க வேண்டியிருக்கிறது. அப்படிப்பட்ட எண்ணம் இல்லையாதலால் இந்த ஆண்டு கிட்டத்தட்ட 40 ஆயிரம் ரூபாய் செலவில் அலங்கார வண்டி கள் விழாவின்போது விடப்பட்டிருக்கின்றன என்பதை மாண்புமிகு உறுப் பினர் அவர்களுக்கு நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. பெ. சீனிவாசன் : தேசீய மாணவர் படையில் இந்தி கட்டளைச் சொற்களைத் தமிழக அரசாங்கம் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று டெல்லி சர்க்கார் வற்புறுத்தி இருக்கிறதா அல்லது கட்டளையிட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அவர்கள் அதைக் கோரியிருக்கிறார் கள். கட்டளை எதுவும் இடவில்லை. ஆனால் நாம் அந்தக் கோரிக்கையை எடுத்துக் கொள்வதாக இல்லை.

திரு. நா. வீராசாமி : தலைவர் அவர்களே, சமீபத்திலே தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு சி. சுப்பிரமணியம் அவர்கள், தமிழகத் திலே என்.சி.சி. படை இல்லை, என்.சி.சி. படையில் ஹிந்திச் சொற்கள் இருக்கிற காரணத்தினாலே அவர்கள் வைத்துக் கொள்ளவில்லை, சொல் கின்றது ஏதோ ஒரு சௌண்ட்தான், அது ஹிந்தியிலே இருந்தால் என்ன, ஆங்கிலத்தில் இருந்தால் என்ன என்று பேசியிருக்கிறார்கள். எனவே அவர்கள் சொல்கிறபடியே அந்தக் கருத்தை அரசாங்கம் ஏற்றுக்கொண்டு தமிழிலேயே அவற்றை ஏற்றுக் கொண்டுவிட ஆணை பிறப்பிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தமிழிலே அவை இருக்க வேண்டு மென்பது ஒரு குறிக்கோளாக இருந்தாலும், தற்பொழுது அவை ஆங்கிலத் திலே இருக்க வேண்டுமென்பதைத்தான் அரசு விரும்புகிறது.

திரு. கரு. சீமைச்சாமி : என்.சி.சி. மாணவர்களுக்கு மிக முக்கிய மானது. அரசாங்க வேலைகளுக்கும் மற்ற வேலைகளுக்கும் செல்லுகிறவர் களுக்கு என்.சி.சி. பயிற்சி பெற்றிருந்தால் சலுகைகள் அளிக்கப்படக்கூடிய நிலை இருக்கிறது. இதையெல்லாம் கருதி முன்பு இருந்த முதலமைச்சர் அவர்கள் மாற்றுப்படை அமைக்கப்படும் என்று சொன்னார்கள். அவ்வாறு மாற்றுப்படை அமைப்பதில் காலம் தாழ்த்தாமல் உடனடியாக ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு மு. கருணாநிதி : மாற்றுத் திட்டத்தை ஜூன் ஜூலை யில் வைக்கலாம் என்ற யோசனை இருக்கிறது. அதை ஆராய குழு அமைக்கப்பட்டிருக்கிறது.

திரு. வி. கே. கோதண்டராமன் : தேசீய மாணவர் படை இருந்த காலத்திலே மத்திய சர்க்கார் அதற்காக வேண்டி குறிப்பிட்ட மானியத் தொகை கொடுத்தார்கள் அல்லவா ? இப்போது மாற்றுப்படை அமைக் கும்போது மத்திய சர்க்கார் அந்த மானியத்தைத் தொடர்ந்து அளிப்பார் களா ? அப்படி மானியம் அளிக்கப்படவில்லை என்று சொன்னாலும் மாற்றுப்படை ஆரம்பிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : மானியம் அளித்தாலும் அளிக்கப் படாவிட்டாலும் மாற்றுத் திட்டத்தை நிச்சயமாக நிறைவேற்றத் தமிழக அரசு முயற்சிகளை மேற்கொள்ளும்.

1969 [மார்ச் 5]

திரு. கே. விநாயகம் : நம்முடைய சர்க்கார் மாற்றுத் திட்டத்தைக் கொண்டு வந்தால், அதை நாங்கள் எதிர்க்கப்ப போவதில்லை. ஆயினும் சர்க்காருக்கே தெரியும். என்.சி.சி. பயிற்சி பெற்றவர்களைத்தான் இந்திய மிலிடரி அகாடமியில் சேர்த்துக் கொள்ள வாய்ப்பு இருக்கிறது. நம்முடைய மாநிலத்தில் என்.சி.சி.யில் பயிற்சி பெற்றவர்கள் நல்ல பரிசுகள் எல்லாம் பெற்று பெரிய உத்தியோகங்களை மிலிடரியில் வகித்து வருகிறார்கள். தற்போது மாற்றுத் திட்டத்தைக் கொண்டு வருவதன் காரணமாக அதற்கு அகில இந்திய ரீதியில் ரெகக்னிஷன் கிடைக்காத நிலையில் நம்முடைய மாநிலத்தைச் சேர்ந்த வாலிபர்களுக்கு வரவேண்டிய வாய்ப்புக்களைச் சர்க்கார் கெடுத்து விடுகிறது அல்லவா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அப்படிப் பாதகம் ஏற்படக்கூடாது என்ற முறையில் தமிழக அரசு எடுத்துக் கொள்ளுகின்ற முயற்சிகளுக்கு எதிர்க்கட்சித் தலைவர்கள் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டு கொள்கிறேன்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : என். சி. சி. படையில் இந்தி ஆணைச் சொற்களை நீக்க அவர்கள் இணங்காத நிலையில் உடனடியாக ஏன் மாற்றுத் திட்டத்தை அமல் நடத்தவில்லை ? ஒவ்வொரு விஷயத்திலும் செய்யப்படும், செய்யப்படும் என்று கூறி காலந் தாழ்த்திக் கொண்டே செல்லுவதுபோல் இதிலும் கடந்த ஓராண்டுக் காலமாக ஒன்றும் நடவடிக்கை எடுத்துக் கொள்ளாததால், அந்தத் துறையிலே உள்ளவர்களுக்கு வேலையில்லாமையும், மாணவர்களுக்கு உற்சாகம் குன்றுகின்ற நிலைமையும் ஏற்பட்டிருக்கிறது. ஒவ்வொரு விஷயத்திலும் "யோசிக்கிறேன்" என்று சொல்லிக் காலம் தாழ்த்திக் கொண்டு செல்லுவது போல் இதிலும் சொல்லிக் கொண்டிராமல் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகுதிரு. மு. கருணாநிதி: எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுடைய விருவிருப்பை நிச்சயமாக இந்த அரசு ஏற்றுக் கொண்டு விரைவில் மாற்றுத் திட்டத்தைத் தொடங்கும்.

Token strike by Central Government employees

* 168 *Q.*—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Chief Minister be pleased to state whether the Central Government requested the State Government to release its personnel to man the essential services during the token strike by the Central Government employees on 19th September 1968?

மாண்புமிகு திரு மு. கருணாநிதி : இல்லை.

திரு. வி. கே. கோதண்டராமன் : மத்திய சர்க்கார் ஊழியர்கள் மீது வழக்குப்போடப்பட்டுள்ளதா? அந்த வழக்குகளை வாபஸ் வாங்க உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு மு. கருணாநிதி : இது, "மாநில அரசு ஊழியர்களை உதவி செய்யவேண்டுமென்று மத்திய அரசு மாநில அரசைக் கேட்டதா ?" என்ற கேள்வியாகும். "வழக்கு வாபஸ்" பற்றிய பிரச்சினை இதிலே எழவில்லை.

திரு. ம. பொ. சிவஞானம் : மத்திய அரசு ஊழியர்களுடைய அடையாள வேலைநிறுத்தத்தை ஒடுக்க மத்திய அரசு அவசரச் சட்டம் பிறப்பித்ததைப் பற்றி இந்த மாநில அரசாங்கத்துடன் முன்னதாகக் கலந்து கொள்ளப்பட்டதா ? இல்லையென்றால், அதற்காக மத்திய அரசுக்குக் கண்டனம் தெரிவிக்கப்பட்டதா ?